**செட்டிக்குளம் பிரதேச சபை**

**------------------------------------**

**வவுனியா மாவட்டம்**

----------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

--------------------------------

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

--------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 27 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 யூலை 10 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஒக்டோபர் 28 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

------------------

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து செட்டிக்குளம் பிரதேச சபையின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடையும் ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாச்சல் கூற்று சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது பின்பற்றப்பட்டிந்த கணக்கீட்டு கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

மீண்டுவரும் வருமானம் தொடர்பான பேரேட்டின் படி கணக்கின் தொகை ரூபா25,036,898 ஆக இருந்ததுடன் பிரதேச சபை 16ம் படிவத்தின் ரூபா 21,385,391 கூட்டுத்தொகையாக இருந்தது. வித்தியாசங்களின் கூட்டுதொகை ரூபா 3,651,507 ஆகும்.

### 1.3.3 கணக்காய்விக்குச் சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் சான்றுகள் இல்லாமையின் காரணமாக ரூபா 101,804,469 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வில் திருப்திகரமாகச் செய்யவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

### 1.3.4 இணக்கமின்மை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைகள் கீழே காட்டப்பட்டவாறு இருந்தது.

(அ)பொது நிதி திணைக்கள பணிப்பாளரின் 2009 கார்த்திகை 13 ஆம் திகதிய 438 ம் இலக்க சுற்றுநிரூபத்துக்கமைய முன்னைய ஆண்டின் கணிப்பீட்டு சபையின் அறிக்கையில் உள்ள பாவிக்கப்படமுடியாத பயன்படுத்தமுடியாத சொத்துக்கள் சம்பந்தமாக சபை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 371 (5) யின் படி செலுத்தப்பட்டிருந்த முற்பணத்தொகைகள் ரூபா 9,000 2013 திசெம்பர் 31 வரை தீர்த்து வைக்கப்படவில்லை.

## 02.நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2013 திசெம்பர் 31 ஆந்திகதி முடிவமைந்த ஆண்டிற்கான பிரதேச சபையின் செயற்பாடுகள் பெறுபேறு ரூபா 15,921,667 மீண்டுவரும் செலவினத்திற்கு மிகையாக வருமானமாக விளைந்திருந்ததுடன் அதற்கு

நேரொத்த முன்னைய ஆண்டின் செயற்பாடுகள் ரூபா 17,637,686 தொகையான செலவினத்திற்கு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் மிகையாக விளைந்திருந்தது.

**<u>2.2பெறவேண்டிய கணக்குகள்</u>**

31 திசெம்பர் 2013இல் உள்ளவாறு கடன் நிலுவையில் ஒரு அலுவலரின் கடன் நிலுவை பெறுமதி ரூபா 20,860 பத்து ஆண்டுகளுக்கு மேலாக அறவிடப்படாமல் இருந்தது.

**2.3 வருமான முகாமைத்துவம்**

**<u>2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உண்மையான மற்றும் பெறப்படவேண்டிய வருமானம்</u>**

வவுனியா செட்டிக்குளம் பிரதேச சபையால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மீளாய்வாண்டிற்கான சமர்ப்பிக்கப்பட்டுள்ள வருமானம், உண்மையான பெறுவனவுகள் நிலுவை வருமானம் என்பன தொடர்பான நிலைமை கீழே காட்டப்படுகின்றன.

| வருமான விபரம் | மதிப்பீட்டு வருமானம் | உண்மை வருமானம் | திரட்டிய நிலுவை 31.12.2013 உள்ளபடி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வாடகைகள் | **1,990,000** | **3,488,703** | **479,907** |
| உரிமங்கள் | **1,125,000** | **704,400** | **3,891,083** |
| ஏனைய வருமானங்கள் | **42,343,380** | **20,843,795** | **43,703** |
| மொத்தம் | **<u>45,458,380</u>** | **<u>25,036,898</u>** | **<u>4,414,690</u>** |

**2.3.2 நீதிமன்ற தண்டப்பணம்**

நீதிமன்றத்தினால் 2013 திசெம்பர் ரூபா 2,696,933 தண்டப்பணம் நிலுவையாக இருந்தது.

**2.3.3 நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான கடை வாடகை, வாகன வாடகை, என்பவற்றிலிருந்து ரூபா 87,931 தொகை 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக காணப்பட்டிருந்த அதே தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------------

### 3.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாக பயன்படுத்திய சொத்துக்கள்

------------------------------------------------------------------------------------------------------------------------

சபையினால் கொள்வனவு செய்யபட்ட ரூபா 45,000 பெறுமதியான கலந்துரையாடல் மண்டப மேடை பயன்படுத்தப்படாமல களஞ்சியத்தில் உள்ளது.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

-----------------------------------------------------------

(அ) சபைக்கு சொந்தமான ஜெசிபி மோட்டார் கிரேட்டர் வாகனங்கள் கட்டண அறவீடினறி பாவனைனக்குட்படுத்தப்பாட்டால் வாடகை வருமானம் ரூபா 246,350 சபையால் பெறப்படவில்லை.

(ஆ) 2003 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,040,243 வங்கி நடைமறைக்கணக்கு மீதி ஒரு வருடத்துக்கு மேல் அசைவற்றுக் காணப்பட்டது.

(இ)உள்ளூர் அபிவிருத்தி நிதியத்துக்கு கொடுக்க வேண்டிய கடன் மீதி 5,255,807 உறுதிப்படுத்தல் கடிதம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

## 03. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழ்க் குறிப்பிடப்படும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பான விடயங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

அ) வருமான கட்டுப்பாடு

ஆ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு

இ) முற்பணப் கட்டுப்பாடு

ஈ) ஒப்பந்த நிருவாகம்

உ) கணக்கீடு